O.S.No.80/2013 – Date : 10.03.2026

PW1 – வெள்ளியங்கிரி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 20 மற்றும் 21ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 9/2ஏ2 ஆகும். ஆனால் தாவா சொத்து விவரத்தில் சர்வே எண்.9/2 என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. சர்வே எண்.9/2 ன் மொத்த விஸ்தீர்ணம் 7 ஏக்கர் 39 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதில் 1 ஏக்கர் 26 செண்டிற்காக தாவா தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய அப்பா பெயர் என்ன என்றால் டி.வி.ராமன்.

10.05.1989 ம் தேதி வாதிகளாகிய நாங்கள் 5ம் பிரதிவாதி பூபதி என்பவருக்கு தாவா சொத்தை விற்பனை செய்ய ஒரு பொது அதிகாரப்பத்திரம் கொடுத்தோம் என்றால் சரி. சர்வே எண்.9/2ல் தாவா சொத்து 1 ஏக்கர் 26 செண்ட் போக மீதி சொத்துக்கள் 1ம் பிரதிவாதி வையாபுரிக்கும் 5ம் பிரதிவாதி பூபதிக்கும் கிரயம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரி. 1 ஏக்கர் 26 செண்ட் மற்றும் 1 மற்றும் 5ம் பிரதிவாதிகள் கிரயம் பெற்ற சொத்துக்களையும் ஒன்றாக இணைத்து மனை நிலங்களாக பிரிவு செய்யப்பட்டது என்றால் சரி. மேற்படி மனை நிலங்களை வா.சா.ஆ.3 படி நிறைய பேர் விலைக்கு வாங்கியிருக்கிறார்கள் என்றால் எனக்குத் தெரியாது. 10.05.1989ம் தேதியில் நானும் மற்ற வாதிகளும் சேர்ந்து 5ம் பிரதிவாதி பூபதிக்கு கொடுத்த பொது அதிகாரப்பத்திரத்தை இதுவரை ரத்து செய்யவில்லை என்றால் சரி. இந்த பொது அதிகாரப்பத்திரத்தை பயன்படுத்தி அதில்

குறிப்படப்பட்டுள்ள சொத்தையும் பூபதிக்கும் வையாபுரிக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களையும் 20, 21 பிரதிவாதிகளுக்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரி.

எனது பிரமாண வாக்குமூலத்தில் 6வது பத்தியில் தாவா சொத்தை 1 முதல் 19 பிரதிவாதிகள் 20 மற்றும் 21 பிரதிவாதிகளுக்கு 23.5.2012 தேதியில் பவர் பத்திரத்தை பயன்படுத்தி விற்பனை செய்துவிட்டார்கள் என்று கூறி உள்ளேன் என்றால் சரி. மேற்படி கிரயப்பத்திரத்தை ரத்து செய்யும்படி நான் தாவாவில் பரிகாரம் கோரவில்லை என்றால் சரி. 20, 21 பிரதிவாதிகளுக்கு கிரயம் ஆன அன்றே சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி கிரயப்பத்திரம் உண்மையானது என்றும் அது எங்களை கட்டுப்படுத்தும் என்பதால்தான் அதை ரத்து செய்ய எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் இருக்கிறோம் என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தாவா சொத்தை நாங்கள் பவர் கொடுத்து விற்பனை செய்து விட்டதால் தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் தாவா சொத்தை பாகம் கோரவும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் கூட்டு சுவாதினத்தில் உள்ளதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1989ம் வருடம் பொது அதிகாரம் பூபதி பெயருக்கு கொடுக்கப்பட்ட பிறகு நாங்கள் தாவா சொத்தில் சுவாதீனத்தில் எப்போதும் இல்லை என்றால் சரியல்ல. பவர் பத்திரத்தில் பவர் எழுதிக்கொடுத்த அன்றே சுவாதீனம் கொடுக்கப்பட்டதாக கண்டுள்ளது

என்றால் சரி.  தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் எனவே பாகம் கோர முடியாது என்றும் நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நாங்கள் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லப்பட்டுள்ள தாவா சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. எனவே 20, 21 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.